சார்பு நீதிமன்றம், மேலூர்
நாள்: 11.03.2026
பி.வா.சா.1 –முகமது அப்துல் காதர் S/o ஷேக்மைதீன்
O.S. No.163/2022
(சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.)
வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:

வா.சா.ஆ.1 தான செட்டில்மெண்ட் ஆவணமானது எனது தந்தை 2ம் பிரதிவாதியான எனக்கும், எனது மகள்களுக்கும், எழுதி வைத்ததன் நோக்கமே எதிர்காலத்தில் நாங்கள் சொத்து தொடர்பாக எந்த பிரச்சினையும் செய்யக்கூடாது என்பதால் தான் என்றால் சரியல்ல. அது என் தந்தையின் சுயசம்பாத்திய சொத்து ஆகும். என் தந்தை வழக்கு சொத்தை ஆண்பிள்ளைகள் அனைவருக்கும் கொடுக்கவேண்டும் என்ற எண்ணத்தில் இருந்தாரே தவிர பெயரளவில் தான் வா.சா.ஆ.1 தான செட்டில்மெண்ட் ஆவணம் எழுதப்பட்டது என்றால் சரியல்ல. வாதியான எனது சகோதரர் தெருவில் துணிக்கடை வைத்து வியாபாரம் செய்து பிழைத்து வருகிறார் என்றால் அதுபற்றி தெரியாது. பெயரளவில் எழுதி கொடுத்துள்ள தான செட்டில்மெண்ட் பத்திரம் வா.சா.ஆ.1ஐ வைத்து நான் வாதிக்கு கொடுக்கவேண்டிய பங்கை கொடுக்காமல் அபகரிக்க முற்படுகிறேன் என்றால் சரியல்ல. என் மேலும், என் மகள்கள் மேலும் உள்ள நல்ல அபிபிராயத்தின் பேரில் தான் தான செட்டில்மெண்ட் பத்திரத்தை என் தந்தை எழுதி வைத்தார்.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA
Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2026.03.11 19:14:26 +0530

Sub Judge

Melur